From-39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 13/17

Deposition of witness for: PW - 11

| | | | |
|---|---|---|---|
| Name | : Murugesan | Father/Husband Name | : Ganapathi |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 22.01.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2024.

**(சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்).**

நான் தனியாமங்களம் பெருமாள்பட்டியில் குடியிருந்து கொண்டு வள்ளவன் ஆயில் மில்லில் மேற்பார்வையாளராக கடந்த 3 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறேன். எதிரி ரவிச்சந்திரனை தெரியுமா என்றால் தெரியாது. அசா1 சின்ன அடைக்கனை எனக்கு தெரியாது. சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு நான் அரிட்டாபட்டியில் உள்ள டிவிஎஸ் சக்ரா கம்பெனியில் செக்யூரிட்டியாக பணிபுரிந்தபோது உள்ளே இருந்து வெளியே செல்லும் வண்டிகளுக்கு கேட் பாஸ் கொடுப்பது வழக்கம். அதுபோல் 2015ம் ஆண்டு நான் கேட் பாஸ் கொடுத்த வண்டி அரிட்டாபட்டி ரோட்டில் விபத்தில் சிக்கியது என சொன்னார்கள். அதில் அடிப்பட்டி நபா் மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக சொல்லிகொண்டார்கள். அவர் இரண்டு நாட்கள் கழித்து இறந்துவிட்டதாக சொன்னார்கள். அந்த வண்டி ஓட்டி சென்றவர் யார் என்று எனக்கு தெரியாது. கேட்பாஸ் கொடுத்தது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர்.**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

டிவிஎஸ் சக்ரா கம்பெனியில் இருந்து பொருட்களை ஏற்றி கொண்டு வெளியே செல்லும் வண்டிக்குதான் நான் கேட் பாஸ் கொடுப்பேன் என்றால் சரிதான். அவ்வாறு ஒவ்வொரு வண்டிக்கும் பதிவெண் எழுதி, நேரம் குறித்து கேட் பாஸ் கொடுப்பேன் என்றால் சரிதான். அதற்கான பதிவேடு பராமரிக்கப்படும் என்றால் சரிதான். டிவிஎஸ் நிர்வாகம் சொல்லியதன்பேரில்தான் என்னை சாட்சியாக போட்டார்கள் என்றால் சரியல்ல. போலீசார் என்னை காவல் நிலையம் அழைத்து விசாரித்தார்கள். எனக்கு விபத்து எதுவும் தெரியாது என்றால் முழு விவரம் எனக்கு தெரியாது.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 13/17

Deposition of witness for: PW - 12

| | | | |
|---|---|---|---|
| Name | : Salim | Father/Husband Name | : Jeyalani |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 22.01.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the day of 2024.

**(சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்).**

நான் அரிட்டாபட்டியில் உள்ள டிவிஎஸ் சக்ரா கம்பெனியில் தலைமை செக்யூரிட்டியாக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாமக எதுவும் எனக்கு தெரியாது. காவல் நிலையத்திலிருந்து சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் நிறுவனத்திற்கு வந்தார்கள். அரிட்டாபட்டி சாலையில் விபத்து நடைபெற்றதாகவும், எங்கள் நிறுவனத்தின் கேட் பாஸ் சம்மந்தமான

பதிவுகளை கேட்டார்கள். அதைபெற்று கொண்டு சென்றுவிட்டார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி ஆஜர்.**

**( அரசுதரப்பில அசா12 பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிக்கப்பட்டு அரசுதரப்பில் குறுக்குவிசாரணை ).**

11.07.2015ம் தேதி நான் அலுவலில் இருந்தபோது 18.15 மணிக்கு TN 58 D 1732 வேனில் நகரியிலிந்து லோடுடன் எதிரி வாகனத்தை ஒட்டி வந்ததாகவும், அதற்கான பதிவேட்டில் அந்த வாகனத்தின் வரவை நான் பதிவு செய்தேன் என்றும், மேற்படி பில் வாங்கிகொண்டு மேற்படி வாகனத்தை முத்துபாண்டி என்பவா லோடுடன ஒட்டி சென்றதாகவும், அவ்வாறு வாகனத்தை லோடுடன் வெளியேற்றும்போது அதன் ஒட்டுனா் முத்துபாண்டி என்று தவறாக பதிவு செய்துவிட்டேன் எனவும், எங்களது நிறுவனத்திற்கு லோடு ஏற்றிவரும் வாகனங்களில் ரவி என்ற ரவிச்சந்திரன் ஒட்டிவந்த TN 29 B 0619 பதிவெண்கொண்ட வேன் அரிட்டாபட்டி ரோடு கரட்டுரத்தம் வளைவு பெருமாள்மலை ஆன்டிகோவில் அருகே தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த இரு சக்கர வாகனத்தில் மோதியதாகவும், அந்த இருசக்கர வாகனத்தை ஒட்டிவந்த விஜயமுருகன் தலையில் காயம்பட்டு இறந்துவிட்டதாகவும், கேள்விபட்டேன என்று போலீசாரிடம கூறிவிட்டு தற்போது எதிரி எங்களது நிறுவனத்திற்கு அவ்வப்போது லோடு ஏற்றி வருவபவா் என்பதால் அவரை காப்பாற்றும் நோக்கில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.